**காரைதீவு பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து காரைதீவு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபையின் அலுவலகம் மற்றும் நூலகம் என்பவை அமைந்துள்ள காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்படல் வேண்டும். | பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, எதிர்வரும் நிதியாண்டிற்கான கணக்கறிக்கையில் தனியாக காட்டப்படும. |
| (ii) 2012 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமுற்ற மோட்டார் லொறியின் கிரயம் ரூபா 5,400,000 தொகை கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தின் கிரயமானது பதிவழிக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் நிதியாண்டுக்கான கணக்குகளிலிருந்து பதிவளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) சபைக்குச் சொந்தமான 09 வகையான வாகனங்கள் கிழக்கு மாகாண சபையினால் ரூபா 1,877,000 தொகைக்கு 2018 டிசம்பர் மாதம் விற்பனை செய்யப்பட்டிருந்தும் இவ் வாகனங்களின் கிரயமானது கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்து காட்டப்பட வேண்டும் | கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா9,886,142 பெறுமதியான 05 கணக்குவிடயங்களுக்குரியதான காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, வாகன உரிமைப் புத்தகங்கள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | காணிகட்டிடம்,மோட்டார் வாகனங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டவையாகும். இவற்றின் பெறுமதியின்மையால், மெய்மையாய்வு அறிக்கை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனம் மற்றும் பொறித்தொகுதிகள் தொடர்பாக விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கைகள் தற்போது கிடைக்கப்பெறவுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் பிரிவு 217 மற்றும் 218 | பி.ச - 46 இற்கமைய காணிகள் கட்டிடங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், காணிகள் கட்டிடங்கள் சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | விதிகளுக்கு அமைவாக பின்பற்றப்படல் வேண்டும். | PS. 46 ற்கு அமைய காணி கட்டிட பதிவேடு முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 272,462 பெறுமதியான 02 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | குறிப்பிட்ட வைப்புக்களை எதிர்வரும் நிதியாண்டில் சபையின் வருமான கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி தொடர்பான ரூபா 272,462 தொகைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் 09 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | உரிய ஆவணங்களைப் பெற்று சீர்செய்ய நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும். | இவ்வருடம் அவற்றினை சீர்செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 33,201 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,563,514 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 25,000 | -- | -- | -- | 25,000 | 2,500 | 2,500 | -- |
| வாடகைகள் | 5,410,000 | 4,727,128 | 4,780,128 | 599,725 | 4,325,000 | 3,978,762 | 3,978,762 | 652,725 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,308,000 | 3,063,894 | 3,337,874 | 3,751,125 | 1,458,000 | 4,045,085 | 3,757,676 | 4,025,105 |
| ஏனைய வருமானம் | 8,160,000 | 7,418,480 | 7,418,480 | -- | 6,717,500 | 5,394,791 | 5,394,791 | -- |
| | 18,903,000 | 15,209,502 | 15,536,482 | 4,350,850 | 12,525,500 | 13,421,138 | 13,133,729 | 4,677,830 |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அறவிடப்பட வேண்டிய திண்மக்கழிவகற்றல் கட்டணம் ரூபா 3,725,342 தொகை நான்கு வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட அல்லது பதிவளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறிப்பிட்ட நிலுவைகளை கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டபோதிலும் நிலுவைகள் இதுவரைக்கும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. நிலுவைகளை பதிவளிப்பு செய்ய உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) 1992 ஆம் ஆண்டு முதல் 2019 வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடை குத்தகைப் பணம் ரூபா 558,725 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட அல்லது பதிவளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறிப்பிட்ட நிலுவைகளை பதிவளிப்பு செய்ய உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 149இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் பிரதேச நிர்வாக எல்லைக்குள் நடாத்தப்பட்ட 35வகையான 125 வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப்பத்திரக் கட்டணமானது குறித்த ஆண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனால், சபையானது அண்ணளவாக ரூபா 102,000 தொகை வருமானத்தை இழந்துள்ளது. | வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப்பத்திரக் கட்டணமானது அறவிட நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும். | இனிவரும் காலங்களில் மூடப்பட்ட நிலையங்கள் தொடர்பாக புதிய நடைமுறையினை பின்பற்றி குறிப்பிட்ட வியாபார நிலையங்களின் பதிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி தொடர்பான கருமங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேண்டும். இருந்தும், பிரதேச சபையினால் 05 உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்படல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அலுவலகக் கட்டிட காணி மற்றும் கலாச்சார மண்டபக் காணி பாரதீனப்படுத்தப்படாமல் உள்ளது. | சபையின் அலுவலகக் கட்டிடம் காணிகள் பாரதீனப்படுத்த நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுமதிக்கப்பட்ட ஆளனியில் 06 வகையான 08 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தன. | வெற்றிடங் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறிப்பிட்ட வெற்றிடங்களுக்காக பதிலீட்டு அடிப்படையில் ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் வெற்றிட விபரங்கள் நிரப்பப்படுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளர், அமைச்சின் செயலாளருக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 07 உத்தியோகத்தர்களின் ரூபா40,647 பெறுமதியான ஊழியர் கடனானது 2006 ஆம் ஆண்டிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனானது அறவிட அல்லது பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் நிலுவை மீதிகளை பதிவளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள்ப்பட்டுள்ளதுடன் அறவிடக்கூடியவர்களிடமிருந்து அறவிடவும் திர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்பட்டு வருகின்ற வியாபார நிலையங்களில் ஒன்றுக்கு மேற்பட்டதாக நிறுவப்பட்டுள்ள விளம்பரக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக இதுவரை காலமும் துணைவிதிகள் உருவாக்கப்படாமையால் சபையானது வருடாந்தம் ரூபா 100,000 வருமானத்தை இழந்துவருகின்றது. | வருமானபெறும் துனைவிதிகளை உருவாக்கி எதிர்காலத்தில் வருமான இழப்பினை தவிர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரிக்கப்பட்ட உபவிதிகளிற்கான மாகாணசபை அனுமதிகள் கிடைக்கும் வரை ஏனைய சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளுக்கமைவாக அவ் விதிமுறைகளை பின்பற்றி எமது சபையிலும் இக் கட்டண அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 மோட்டார் சைக்கிள்களை திருத்துவதற்கு அல்லது ஏலவிற்பனை செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கான அல்லது திருத்தி பயன்படுத்துவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறிப்பிட்ட வாகனங்களை திருத்தம் செய்யும் செலவினை விட அதன் பாவனை குறைவாக காணப்படும் எனும் காரணத்தினால் அவற்றினை திருத்தம் செய்யாது காணப்படுவதுடன் குறிப்பிட்ட வாகனங்களை பிரதி பிரதம செயலாளர் - பொறியியல் கி.மா ஊடாக அகற்ற அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.5.2 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடகிழக்கு கரையோர சமூக அபிவிருத்தி திட்டத்தின் (NECCDEP) நிதியுதவியின் கீழ் ரூபா 14,347,200 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 17 கடையறைகள் 10 வருட காலமாக எதுவித பயனுமின்றி விளைவற்றுக் காணப்படுகின்றது. | கடையறைகளை வாடகைக்கு வழங்க அல்லது வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சந்தையின் கீழ் தளப்பகுதியல் சபையின் தீர்மானத்துக்கு அமைய Food City ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட கட்டடத்தினை பூரணமாக செயற்பாடுடையதாக மாற்றியமைக்க முடியும். |

### 3.5.5 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு வழங்கப்பட்ட 02 கல் அமுக்கி (Road Roller) மற்றும் 01 கொங்கிறீட் கலவை இயந்திரம் பயனற்று காணப்படுகின்றது. | குறிப்பிட்ட இயந்திரங்கள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறிப்பிட்ட இயந்திரங்களை திருத்தம் செய்யும் செலவினை விட அதன் பாவனை குறைவாக காணப்படும் எனும் காரணத்தினால் அவற்றினை திருத்தம் செய்யாது காணப்படுவதுடன் குறிப்பிட்ட வாகனங்களை பிரதி பிரதம செயலாளர் - (பொறியியல்) கிழக்கு மாகாணம் ஊடாக அகற்ற அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு நடைமுறையினை ஏற்படுத்தல் வேண்டும். | குறிப்பிட்ட விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறிப்பிட்ட விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். |